**சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்.**

**முன்னிலை : திரு.K.பழனிவேல், பி.எல்.,**

**சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.**

2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 04 ஆம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண். 60/2021**

***TNCB 19000-273-2021***

1). திருமதி. ராஜேஸ்வரி, க/பெ. ஸ்ரீ குப்புசாமி, இந்து, வயது சுமார் 61, முகவரி கதவு எண். 1/131, ஆலங்கொம்பு, ஜடையம்பாளையம், மேட்டுப்பாளையம் தாலுக்கா.

2). திரு. திருமலைசெல்வன், த/பெ. திரு. சுப்பையன், வயது சுமார் 54, முகவரி கதவு எண். 1/131, ஆலங்கொம்பு, ஜடையம்பாளையம், மேட்டுப்பாளையம் தாலுக்கா.

**....வாதிகள்**

**/// எதிர் ///**

திருமதி. பரிமளம், க/பெ. திரு. சண்முகசுந்தரம், இந்து, வயது சுமார் 58, முகவரி கதவு எண். 6/218, மொங்கம்பாளையம், தேரம்பாளையம், மேட்டுப்பாளையம் தாலுக்கா.

**....பிரதிவாதி**

அசல் வழக்கானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 1 ன் கீழ் தாவா சொத்தை 3 சமபாகங்களாக பிரித்து அதில் 2 பாகத்தினை வாதிகளுக்கு ஒதுக்க கோரியும், வழக்கின் செலவுத்தொகை கோரியும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் - 01.07.2021

வழக்கு மூலம் ஏற்பட்ட நாள் - கோயமுத்தூர் ரிடிடு, மேட்டுப்பாளையம் வட்டம், நீதிமன்றத்தின் அதிகார எல்லைக்குட்பட்ட பெள்ளாதி கிராமத்தில் 05.09.1966, 16.08.1992,

மற்றும் 28.04.2021 ஆகிய தேதிகளில் ஏற்பட்டுள்ளது.

வழக்கு மதிப்பீட்டு விபரம் - நீதிமன்ற அதிகார வரம்பிற்காகவும், நீதிமன்ற முத்திரை கட்டணத்திற்காகவும், தாவா மதிப்பு ரூ. 2,00,000/-ம் அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பீட்டுச் சட்டம் பிரிவு 37(2) மற்றும் 27 (c)- ன் கீழ் ரூ. 5,000/- நீதிமன்ற கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

***Details of Valuation***

Value of the Suit Property : Rs. 3,00,000/-
Plaintiff's 2/3rd share value in the B schedule property
of total extent 1.50 cents : Rs. 2,00,000/-

Court fees paid U/s 37(2) of the Tamilnadu
Court fees and Suit Valuation Act 1955
TNCF & SV Act 1955 : Rs. 5,000/-

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 03.12.2024 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்து, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சதிஷ், அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K.T. சிவப்புகழ், அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்பாணை**

***1). வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்பட்டு, தாவா சொத்தை 3 சம பாகங்களாக பிரித்து அதில் 2/3 பாகம் 1 மற்றும் 2 வாதிகளுக்கு கூட்டாகவும், 1/3***

*பாகம் பிரதிவாதிக்கும் கிடைக்கத்தக்கது என தீர்ப்பளிக்கப்படுகிறது.*

*2). மேலும், இதன் தொடர்ச்சியாக உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 20 விதி 18ன் படி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வாதிகளுக்கு உத்தரவிடப்படுகிறது.*

*3). வழக்கின் தன்மை கருதி அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.*

<u>செலவுத் தொகை பட்டியல்</u>

| <u>வாதிகள் தரப்பில்:</u> | <u>பிரதிவாதி தரப்பில்</u> |
|---|---|
| - இல்லை- | – இல்லை – |

<u>சொத்துவிபரம்</u>

<u>"B" ஷெட்யூல் 4 லக்கமிட்ட சுப்பையனுக்கு ஏற்பட்ட பாக சொத்துக்களின் விபரம்</u>

கோயமுத்தூர் ரிடிடு, மேட்டுப்பாளையம் சப்ரிடிடு, அவனுசி தாலூக்கா பெள்ளாதி கிராமத்தில் க.ச 185/2B நெ. பு.கா.ஏ 0 டி 02க்கு தரம் 0.04 ல் கிழபுரம் 1 முதல் 3 லக்கமிட்டவர்கள் பாகத்துக்கும் கிழக்கு, மாகாளி கவுண்டர் பூமிக்கும் தெற்கு, 186 நெ. காலைக்கும் மேற்கு, 185/3 நெ. காலைக்கும் வடக்கு இதன் மத்தியில் ஏ 0 டி 01-க்கு தரம் 0.02 இது பூராவும். இதற்கு 25 மடங்கு தீர்வை ரூ. 0.02x 25= 0.050.

B ஷெட்யூல் 4 லக்கமிட்ட சுப்பையனுக்கு ஏற்பட்ட சொத்துக்களின் தொடர்ச்சி,

பின்னும் ஷை கிராமம் க.ச. 185/3 நெ. பு. காலை ஏ 0 டி 48 -க்கு தரம் ரூ. 0.66 ல் கிழமேல் 1 முதல் 3 லக்கமிட்டவர்கள் பாகத்துக்கும் கிழக்கு, 185/2B காலைக்கும் தெற்கு, 5 லக்கமிட்டவர்

பாகத்துக்கும் வடக்கு, 186 காலைக்கும் மேற்கு, இதன் மத்தியில் ஏ 0 டி 14 க்கு தரம் ரூ. 0.19 இது பூராவும். இதற்கு 25 மடங்கு தீர்வை ரூ. 0.19X 25 = 4.75 பின்னும் ஷை கிராமம் க.ச. 186/3 நெ. பு.கா. ஏ 0 டி 45- க்கு தரம் 0.65 இது பூராவும். இதற்கு 25 மடங்கு தீர்வை 0.62x 25= 15.50 பின்னும் க.ச 186/4 நெ. பு. காலை ஏ 1 டி 25 -க்கு தரம் ரூ. 1.71 -ல் வடபுரம் 186/3 காலைக்கும் தெற்கு, 187 நெ. காலைக்கும் மேற்கு 5 லக்கமிட்டவர் பாகத்துக்கும் வடக்கு, 185 காலைக்கும் கிழக்கு, இதன் மத்தியில் ஏ 0 டி 22 க்கு தரம் ரூ. 0.30 இது பூராவும். இதற்கு 25 மடங்கு தீர்வை 0.35x 25= 7.50 பின்னும் க.ச 185/4 நெ. காலை ஏ 1 டி 02 க்கு தரம் 1.40 ல் கிழபுரம் 185/3 காலைக்கும் தெற்கு, 5 லக்கமிட்டவர் பாகத்துக்கும் வடக்கு, 1 முதல் 3 லக்கமிட்டவர்கள் பாகத்துக்கும் கிழக்கு, 186 காலைக்கும் மேற்கு, மத்தியில் ஏ 0 டி 20 க்கு தரம் 0.27 இது பூராவும். இதற்கு 25 மடங்கு தீர்வை 0.29x 25 = 6.75.

க.ச 185/4 நெ. காலை ஏ 1 டி 02 க்கு தரம் 1.40 ல் மேல்புரம் சாளைக்கும் முதலியவைகளுக்காக விடப்பட்டிருக்கும் ஏ 0 டி12- க்கு தரம் 0.16 -ல் பொதுவில் 1/3 பங்கு ஏக்கர் 0.04 க்கு தரம் 0.05 இது பூராவும் இதற்கு 25 மடங்கு தீர்வை 0.05x25 = 1.25.

2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 04ம் நாளான இன்று என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

**ஒப்பம்/- K.பழனிவேல்**

சார்பு நீதிபதி,

மேட்டுப்பாளையம்.